# அக்டோபர் – 22 – திங்கள்

**புனித 2ம் அருளப்பர் - திருத்தந்தை**

**அனைத்துலகோரே! ஆண்டவரை ஆர்ப்பரித்து வாழ்த்துங்கள்! திபா. 100:1**

## முதல் வாசகம் : ஏபேசியர் 2 : 1 – 10

சகோதர சகோதரிகளே! உங்களுடைய குற்றங்களையும் பாவங்களையும் முன்னிட்டு நீங்கள் இறந்தவர்களாய் இருந்தீர்கள்.அப்பொழுது நீங்கள் இவ்வுலகப்போக்கின்படி, வான்வெளியில் அதிகாரம் செலுத்தும் தலைவனுக்கு ஏற்ப வாழ்ந்து வந்தீர்கள். கடவுளுக்குக் கீழ்ப்படியாத மக்களிடையே இப்போது செயலாற்றும் தீய ஆற்றலுக்குப் பணிந்து நடந்தீர்கள்.இந்நிலையில்தான் ஒரு காலத்தில் நாம் எல்லாரும் இருந்தோம். நம்முடைய ஊனியல்பின் தீயநாட்டங்களின்படி வாழ்ந்து, உடலும் மனமும் விரும்பியவாறு செயல்பட்டு, மற்றவர்களைப் போலவே நாமும் இயல்பாகக் கடவுளின் சினத்துக்கு ஆளானோம்.ஆனால் கடவுள் மிகுந்த இரக்கம் உடையவர். அவர் நம்மீது மிகுந்த அன்புகொண்டுள்ளார். குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாயிருந்த நாம் அவ்வன்பின் மூலம் இணைந்து உயிர்பெறச்செய்தார். நீங்கள் மீட்கப்பட்டிருப்பது அந்த அருளாலேயே.இயேசு கிறிஸ்துவோடு இணைந்த நிலையில் நாம் அவரோடு உயிர்த்தெழவும் விண்ணுலகில் அவரோடு அமரவும் செய்தார்.கிறிஸ்து இயேசு வழியாகக் கடவுள் நமக்குச்செய்த நன்மையையும் அவரது ஒப்புயர்வற்ற அருள்வளத்தையும் இனிவரும் காலங்களிலும் எடுத்துக் காட்டுவதற்காகவே இவ்வாறு செய்தார்.நீங்கள் அந்த அருளாலேயே நம்பிக்கையின் வழியாக மீட்கப்பட்டிருக்கிறீர்கள். இது உங்கள் செயல் அல்ல. மாறாக இது கடவுளின் கொடை. இது மனிதச்செயல்களால் ஆனது அல்ல. எனவே எவரும் பெருமை பாராட்ட இயலாது.ஏனெனில் நாம் கடவுளின் கைவேலைப்பாடு நற்செயல்கள் புரிவதற்கென்றே கிறிஸ்து இயேசு வழியாய்ப் படைக்கப்பட்டிருக்கிறோம். இவ்வாறு நற்செயல்கள் புரிந்து வாழும்படி கடவுள் முன்கூட்டியே ஏற்பாடு செய்திருக்கிறார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே நம்மைப் படைத்தவர். நாம் அவர் மக்கள்.

## நற்செய்தி : லூக்கா 12 : 13 - 21

அக்காலத்தில் கூட்டத்திலிருந்து ஒருவர் இயேசுவிடம், “ போதகரே, சொத்தை என்னோடு பங்கிட்டுக்கொள்ளுமாறு என் சகோதரருக்குச் சொல்லும்“ என்றார். அவர் அந்த ஆளைநோக்கி, “என்னை உங்களுக்கு நடுவராகவோ பாகம் பிரிப்பவராகவோ அமர்த்தியவர் யார்?“ என்றுகேட்டார். பின்பு அவர் அவர்களை நோக்கி, “எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாதவாறு எச்சரிக்கையாயிருங்கள். மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்துவிடாது“ என்றார். அவர்களுக்கு அவர் ஓர் உவமையைச் சொன்னார்: “செல்வனாயிருந்த ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அவன், “நான் என்ன செய்வேன்? என் விளை பொருள்களைச் சேர்த்து வைக்க இடமில்லையே! “என்று எண்ணினான். “ஒன்று செய்வேன் என் களஞ்சியங்களை இடித்து இன்னும் பெரிதாகக் கட்டுவேன் அங்கு என் தானியத்தையும் பொருள்களையும் சேர்த்து வைப்பேன். பின்பு,என் நெஞ்சமே,உனக்குப் பல்லாண்டுகளுக்கு வேண்டிய பலவகைப் பொருள்கள் வைக்கப்பட்டுள்ளன. நீ ஓய்வெடு. உண்டு குடித்து, மகிழ்ச்சியில் திளைத்திடு எனச் சொல்வேன்‘‘ என்று தனக்குள் கூறிக்கொண்டான். ஆனால் கடவுள் அவனிடம், “அறிவிலியே, இன்றிரவே உன் உயிர் உன்னைவிட்டுப் பிரிந்துவிடும். அப்பொழுது நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்?“ என்று கேட்டார். கடவுள் முன்னிலையில் செல்வம் இல்லாதவராய்த் தமக்காகவே செல்வம் சேர்ப்பவர் இத்தகையோரே” என்றார்.

**தியானம்:** எமது வாழ்க்கையில் ஏற்படும் துன்பமான, சோகமான காரியங்களின் நிமித்தமே, அதனால் தான் நாங்கள் எழுந்து நடக்கமுடியாமல் மரித்துப்போய் இருக்கின்றோம். ஆனால் இறைவனோ எமது பாவங்களை, குற்றங்களைப் பாராமல் தன்னையே எங்களுக்காக பலியாக்கினார். எம்மைப் பாவத்தில் இருந்து விடுதலை தந்து தன்னுடன் கூடவே உயிர்பெறச் செய்தார். ஷஷகுற்றங்களின் நிமித்தம் இறந்தவர்களாயிருந்த நாம் அவரது அன்பின் மூலம் இறந்து உயிர்பெறச் செய்தார்'' (எபே.2:5). மேலும் நாங்கள் இறைவனுக்கா? செல்வத்திற்காக? முதலிடம் கொடுக்கவேண்டும் என்பதை நற்செய்தியில் அறிவற்ற செல்வன் உவமை மூலம் இயேசுவெளிப்படுத்துகிறார். அவன் களஞ்சியங்களைப் பெரிதாக்குவேன், தானியங்களை நிறைய சேர்த்து வைப்பேன் என்று பல கனவுகளை மனதில் நிறுத்தி பெருமிதமடைகின்றான். ஆனால் இயேசுவோ இன்றிரவே உன் உயிர் எடுக்கப்படும் என்று கூறுகிறார். இதனால் இறைவனுக்கு முதலிடம் கொடுக்கத் தவறி விடுகின்றான். இன்று எங்கள் மத்தியிலும் கூட இதே நிலை எம்மத்திலும் காணத்தான் செய்கின்றன. தான் என்று, தனது குடும்பம் என்று இரவுபகலாக உழைத்து இறுதியில் அவர்கள் ஏதோவொரு காரணத்தால் பெரியதாக்கத்திற்கு உள்ளாகின்றார்கள். ஆனால் அவர்கள் அதைப் புரிந்து கொள்ள தாங்கள் செய்வது சரி என்று இறைவனுக்கு முதலிடம் கொடுத்து வாழாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். எனவே பணம் பணம் என்று அலைந்து இறைவனை மறந்து வாழாமல், இறைவனுக்கு முன்னுரிமை கொடுத்து அவரோடு நாங்களும் இணைந்து வாழ எங்களைத் தயார்படுத்துவோம்.